மானால் பரிசீலனை செய்யப்படும். கனம் அங்கத்தினர் கோரிக்கையையும் பரிசீலனை செய்யலாம்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, தேங்காய், மட்டையிலிருந்து கயிறு திரிக்கின்ற தொழிலுக்கு அரசாங்கம் உதவி செய்யும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆகவே, கூடுதலாக எந்த அளவுக்கு தொகை கடனாக அரசாங்கம் வழங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்னும் கயிறு திரிப்பதிலேயே இருக்கிறார்கள். கயிறு திரிப்பதோடு நின்றுவிடாமல் பல உப பொருட்களையும் உருவாக்க முடியும். அதற்கும் அரசாங்கம் உதவி செய்யும். எவ்வளவு பணம் தேவைப்பட்டாலும் நிலம் வாங்க, கட்டிடங்கள் கட்ட, இயந்திரங்கள் வாங்க, மற்றும் உள்ள செலவுகளுக்கு எவ்வளவுத் தேவைப்படுகிறதோ அதில் 75 சதவிகிதம் வரை கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

தென் ஆர்க்காடு மாவட்டத்துக்கு உருக்காலை.

* 610. வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உருக்காலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

கரூர்—தூத்துக்குடி இரயில் பாதை.

* 611. வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூருக்கும் தூத்துக்குடிக்குமிடையே அகல இரயில் பாதை அமைக்கக் கோரி, மத்திய அரசுக்கு பரிந்துரை ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கரூர் வழியாக சேலத்திலிருந்து திண்டுக்கல் வரை அகலப்பாதை அமைத்தல், திண்டுக்கல்—தூத்துக்குடி (மதுரை வழி) இருப்புப்பாதையை அகலப்

1972 மார்ச் 21]

பாதையாக்குதல் (மணியாச்சியிலிருந்து திருநெல்வேலி வரையுள்ள குறுகிய இணைப்பு உட்பட) திட்டங்களை நான்காவது திட்டத்தில் சேர்த்து கொள்வதற்காக மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த கரூர்–திண்டுக்கல் இருப்புப்பாதை ஒரு ஆண்டுக்கு முன்னாலே சர்வே செய்யப்பட்ட திட்டமாகும். அதற்குப் பதிலாக அந்தப் பாதையை மிலக்குறிச்சி, காலக்குறிச்சி, பல்லப்பட்டி, வேடசந்தூர் மக்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் அமைத்தால், அந்தப் பகுதிகளின் முன்னேற்றத்திற்கு ஒரு உப சாதனமாக இருக்கும். அந்த வகையில் மத்திய அரசாங்கம் அவர்களுடைய சர்வேயை மீண்டும் பரிசிலித்து, இந்த புதிய சர்வேயை செய்ய நமது மாநில அரசு வேண்டுகோள் விடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே. இந்தத் திட்டம் 1965-ல் செய்யப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் சர்வே செய்யப்பட்டது. அந்த விபரப்படி இப்போது ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல்லப்பட்டி வழியாக இரயில் பாதை உண்டா என்பதைச் சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய விபரம் இப்போது இல்லை.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, திருப்பூர், காங்கேயம், தாராபுரம் வழியாக பழனிக்கு ஒரு இருப்புப்பாதை போடுவதுபற்றி 20 ஆண்டுகளுக்கு முன்பே சர்வே நடைபெற்றது. அதை மீண்டும் போடுவதற்கு மத்திய அரசை நமது மாநில அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஏற்கனவே சிபாரிசு செய்யப்பட்ட வேலைகள் இன்னும் நடைபெறுமல் இருக்கின்றன. ஆகவே, அவை பூர்த்தியான பின்னால் சிபாரிசு செய்யலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know the other railway lines, broad-guage railway lines, recommended to Central Government by this Government for formation?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The following is the list of new railway lines recommended to Government of India for being taken up on a priority basis during the successive plan periods :—

(i) Theni-Gudalur

(ii) Neiveli-Vridachalam-Salem

(iii) Salem-Bangalore

(iv) Chinna Salem—Chingleput.

(v) Tirunelveli-Cape Comorin

(vi) Salem-Tiruchirappalli

(vii) Manamadurai-Tuticorin

(viii) Thanjavur-Pattukottai

(ix) Kanchipuram-Vellore

(x) Satyamangalam-Chamrajanagar

(xi) Manamadurai-Virudhunagar

(xii) Ariyalur-Salem (via) Perambalur, Thuraiyur and Namakal.

(xiii) Karur-Dindigul (via) Gujiliamparai

Cauvery Irrigation System

* 612 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have received loan from the World Bank for the Modernisation of Cauvery Irrigation System in Thanjavur District?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

சோலையாறு அணைத்திட்டம்.

* 613 வினா.—திரு. இ. இராமசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சோலையாறு அணையைப் பார்க்க வெளியூரிலிருந்து ஜனங்கள் வந்துகொண்டிருப்பதால் அதில் படகுவிட அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.